**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.238/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திரு.செல்வம்** |
| Father's Name/Husband Name: | **திரு.சேகர்** |
| Village : | **மங்கூன்** |
| Taluk : | **ஆலத்தூர்** |
| Age : | 36 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.07.2025

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி ஆஜர்.)**
**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஊட்டத்தூரில் உள்ள சுத்த ரத்தினேஷ்வரர் கோவிலில் செயல் அலுவலராக பணிபுரிகின்றேன். ஆஜர் எதிரியை தெரியும். சம்பவத்திற்கு முன்பாக எனக்கும் எதிரிக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை. கடந்த 06.01.2023 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது எங்கள் வீட்டு தோட்டத்தில் நாங்கள் பயிர்யிட்டு இருந்த அவரைச்செடியை எதிரியின் ஆடு மேய்ந்துவிட்டது. நான் அதனை தூரத்திவிட்டேன். அதற்கு எதிரி எங்கள் வீட்டிற்கு முன்பாக தேவடியா மகனே, குச்சிகாரி மகனே என்று தகாத வார்த்தைகளால் பேசி வாங்கு அறுவாளால் என்னுடைய உதட்டை வெட்டிவிட்டார். இந்த சம்பவம் அருகில் இருந்த மகேஷ்வரி, கருத்தாலி என்ற முத்துசாமி, சங்கீதா ஆகியோர்களுக்கு தெரியும். அதன் பின்பு நான் வீட்டில் படுத்திருந்தேன். அதன் பின்பு மாலை 06.30 மணிக்கு எங்கள் தோட்டத்தின் வழியாக வந்த எதிரியை பார்த்து என் அம்மா செல்லம் ஏன் என் மகனை வெட்டினாய் என்று கேட்டார். அதற்கு எதிரி என் அம்மாவை அப்படிதாண்டி வெட்டுவேன் தேவடியா, குச்சிக்காரி, ஜாதி விட்டு ஜாதி வந்தவ என்று தகாத வார்த்தையால் பேசினார். நான்

விலக்கிவிட சென்ற போது எதிரி வாங்கு அறுவாளால் மீண்டும் என்னை வெட்ட வந்தார். என்மீது வெட்டு படாமல் இருப்பதற்காக என் அம்மா எதிரியை விலக்கவந்தார். அப்போது எதிரி என் அம்மாவின் சேலையை பிடித்து இழுத்து உன்னை இங்கேயே அசிங்கப்படுத்திடுவேண் என்று தகாத வார்த்தைகளால் பேசினார். என் அம்மா அவரை பாதுகாத்துக் கொள்வதற்கு சேலையை பிடித்து இழுத்துக்கொண்டார். அதில் எதிரி தடுமாறி கீழே விழுந்துவிட்டார். என் அம்மா எதிரியை தடுக்கும் போது எதிரி ஓங்கி கையால் வெட்டுப்பட்ட அதே இடத்தில் அடித்துவிட்டார். மறுபடியும் எனக்கு இரத்தக்கசிவு ஏற்பட்டு மயக்கம் அடைந்துவிட்டேன். எனது அம்மா என்னை கார் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். அன்றைய தினம் இரவே எனக்கு சிகிச்சை முடித்து வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். மறுநாள் காலை நான் பாடாலூர் காவல் நிலையத்தில் சம்பவம் குறித்து புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் அளித்ததது தான். **அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் அளித்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) **எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இவ்வழக்கின் எதிர் வழக்கான C.C.No.216/2023 என்ற வழக்கானது நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாலும் அவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் ஆகி வந்தபிறகு அ.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.